# மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 12/2017** **நாள். 11.09.2023**

2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| பெயர் | சங்கீதா | தொழில் | |
|---|---|---|---|
| த. பெ./க.பெ. | காத்தவராயன் | சாதி | |
| கிராமம் | மலையரசன்குப்பம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 26 |

**ம.சா.1**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

என் கணவர் காத்தவராயன் என்பவர் விபத்தில் இறந்துவிட்டதால் நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 28.10.2016 தேதியில் திருவண்ணாமலை முதல் விழுப்புரம் செல்லும் வழியில் மாலை 06.30 மணிக்கு விபத்து நடந்தது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. பூபாலன் என்பவர் விபத்து பற்றி என்னிடம் தகவல் சொன்னார். பின்னர் நான் முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன்.அப்போது உயிர் இருந்தது. பேசும் நிலையில் இல்லை. பின்னர் அன்றைய தினமே இறந்து விட்டார். டாடா ஏசி வாகனம் என் கணவர் மீது மோதி விட்டதாக சொன்னார்கள். டாடா ஏசி வாகனத்தின் பதிவு எண் டிஎன்-32-இ-0441 ஆகும். என் கணவர் இரு சக்கர வாகனத்தில் சென்றார். அதன் பதிவு எண் தெரியாது. என் கணவர் சென்ற வாகனம் அவரின் நண்பருக்கு சொந்தமானது. முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 நான் படித்து பார்த்தேன். முதல் தகவல் அறிக்கையில் என் கணவர் இரு சக்கர வாகனத்தில் சென்று முன்னால் சென்ற டாடா ஏசி வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை என் கணவருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை விவரங்களை நான் கேட்டு தெரிந்து கொண்டேன். என் கணவர் 10 மீட்டர் இடைவெளி விட்டு சென்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றாலும் விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்றால் சரியல்ல. டீசல் இல்லாமல் டாடா ஏசி வாகனம் நின்று விட்டதால் என்றாலும் பின்னால் சென்ற என் கணவர் அதன் மீது மோதி விட்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்று போலீசார் புலன் விசாரணைக்கு பிறகு வழக்கை முடித்து விட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுநர் விபத்திற்கு காரணம் இல்லை என்றாலும் தவறுதலாக டாடா ஏசி வாகனத்தின் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆவணங்களின் படி டாடா ஏசி வாகனத்தின் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுநர் மீது

தவறு இல்லாததால் தான் நாங்கள் அவர் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2,3 மனுதாரர்கள் என் மாமனார், மாமியார் ஆவார்கள். 4,5 மனுதாரர்கள் என் பிள்ளைகள். என் கணவர் இறக்கும் போது 29 வயதாகும். என் கணவர் ஜெ.சி.பி. ஆப்ரேட்டராக வேலை செய்து வந்தார். என் கணவரின் வயது, வேலை, வருமானம் ஆகியவற்றை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சாயில்லை. விபத்து சம்பந்தமாக போலீசார் ஒரு வாரம் கழித்து என்னை விசாரித்தார்கள். போலீசார் விபத்து சம்பந்தமாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்று ஞாபகமில்லை. நான் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகை ரூ.50,00,000/- அதிகம் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்பதால் 1,2 எதிர்மனுதாரர்கள் எனக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டியதில்லை என்றாலும் என் கணவர் சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டுதாரர் தான் எனக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. 1,2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையின்படி டாடா ஏசி வாகனம் விபத்து ஏற்படுத்திய வாகனம் இல்லை என்றால் சரியல்ல.